ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2446/53 - 2025 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2025.07.25
2446/53 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**தெரணியகல பிரதேச சபை**

சப்ரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் 2316/20 ஆம் இலக்க மற்றும் 2023 சனவரி 24 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ள "சப்ரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளினால் பேணி வரப்படும் வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகளின் திட்டவரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் பெயர் பட்டியலினைக் குறிப்பிட்டு அறிவித்தல்களை வெளியிடுதல் தொடர்பான கட்டளைகள்" கோவையில் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) ஆம் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆணையின் கீழ் 2025/03/14 ஆம் திகதிய மற்றும் 2427/32 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு உள்ள அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டு உள்ள அட்டவணையில் தெரணியகல பிரதேச சபைக்கு உரித்தாகுதல் வேண்டும் எனக் கருதப்பட்டுள்ள வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் என்பவற்றில், குறித்த அறிவித்தலின் மூலம் ஆணையிடப்பட்டு உள்ள தினத்திற்கு முன்னர் உரிய நீதிமன்றம் ஒன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்காத வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் சபைக்கு உரித்தாகுதல் வேண்டும் எனக் கருதப்படுகின்றது என உறுதிப்படுத்தப்பட்ட வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் சகலதும் தெரணியகல பிரதேச சபைக்கு உரித்தாகுதல் வேண்டும் என 2025/06/17 ஆம் திகதிய மற்றும் 01 ஆம் இலக்க தீர்மானத்தின் கீழ் தீர்மானிக்கப்பட்டு உள்ளது என்பதனை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறியத் தரப்படுகின்றது.


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* WWW. documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

குறித்த வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் தொடர்பான பெயர்ப்பட்டியல் ஒன்று இங்கு அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு உள்ளதுடன் அதில் உள்ளடக்கப்பட்டு உள்ள சகல வீதிகளும் மற்றும் ஒடுங்கிய பாதைகளும் பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (5) ஆம் உப பிரிவின் கீழ் தெரணியகல பிரதேச சபைக்கு உரித்தாக்கப்பட்டு உள்ள வீதிகள் மற்றும் ஒடுங்கிய பாதைகள் எனக் கருதப்படுதல் வேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது.

**ஆர்.டீ. நலீன் புஷ்பகுமார,**
செயலாளர் மற்றும் அதிகாரம் பணிகள்
கடமைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்தும்
உத்தியோகத்தர்,
தெரணியகல பிரதேச சபை

பிரதேச சபை அலுவலகம்,
தெரணியகல,
2025, யூன் 17.